மாயூரம்—மணல்மேடு பேருந்து பணி

*544 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து—வில்லியநல்லூர் கிழாய் வழியாக மணல் மேடு வரை பஸ் விட ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாயூரத்திலிருந்து வில்லிய நல்லூர் கிழாய் மணல்மேடு வழியாக இலுப்பைப்பட்டு வரை பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று தஞ்சாவூர் மண்டல போக்குவரத்து ஆணையரால் பரிசீலிக்கப்பட்டது. ஆயினும் வில்லிய நல்லூருக்கும் இலுப்பைப்பட்டிக்கும் இடைப்பட்ட சாலை, பேருந்து செல்வதற்கு தகுதியற்றது எனக் காணப்பட்டதால் அச்செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

Madras-Bangalore State Transport Bus

* 545 *Q*.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal to start night service from Madras to Bangalore by the State Transport Department ; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இரு மாநிலங்களுக்கிடையே உடன்பாடு ஏற்பட்ட உடன் ஆரம்பிக்கும் தேதி நிர்ணயிக்கப்படும்.

Thiru B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister, it is seen that the same answer was given by the previous Minister Hon. Mr. Aditanar. May I know from the present Hon. Minister when it will take shape? There is great need for the implementation of this night service from Madras to Bangalore. May I know from the Hon. Minister when exactly this bus route will be operated ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, கர்னாடக மாநில அரசுடன் இதுபற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவர்களோடு நாம் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்கு வந்தபிறகுதான் இப்பேருந்துகளை நாம் விட முடியும். பேச்சுவார்த்தைகளில் காலதாமதம் ஆவதால்தான் சீக்கிரம் உடன்பாட்டுக்கு வரமுடியவில்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : Many private buses are plying between Bangalore and Madras and they are getting a good porfit and also giving facilities to the passengers. May I request the Hon. Minister to take extraordinary steps to see that the question is settled very soon?